
**ஜனவரி – 14**

# TNPSC துளிகள்

- சமீபத்தில், அமெரிக்காவில் உள்ள மேரிலாண்ட் மருத்துவமனையின் மருத்துவர்கள், ஒரு பன்றியின் இதயத்தை ஒரு நோயாளிக்குப் பொருத்தினர்.
    - மருத்துவ வரலாற்றில் முதல் முறையாக இது போன்ற உறுப்பு மாற்றுச் சிகிச்சை செய்யப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டு முதல் இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகளின் ஸ்பான்சராக விவோ நிறுவனத்திற்குப் பதிலாக டாடா குழுமம் செயல்படும்.
    - விவோ என்பது சீன நாட்டின் ஒரு கைபேசித் தயாரிப்பு நிறுவனம் ஆகும்.
- தொலைத்தொடர்புத் துறையானது ஆறாவது தலைமுறை அல்லது 6G என்ற தொழில் நுட்பத்திற்காக வேண்டி ஆறு கல்வித்துறை சார்ந்த பணிக்குழுக்களை தொழில் நுட்பப் புத்தாக்கக் குழுவின் கீழ் உருவாக்கியது.
- வியட்நாமில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில பழங்களில் கொரோனா வைரஸ் தடயங்கள் கண்டறியப்பட்டதை அடுத்து சீனா பல பல்பொருள் அங்காடிகளை மூடி உள்ளது.
    - கொரோனா வைரஸ் மாதிரிகள் டிராகன் பழத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிக்கைகள் கூறுகின்றன.
- மேக்சிமே வச்சியர் லக்ராவே என்பவர், ஜான் கிரிசிஸ்டோஃப் துடா என்பவரை வீழ்த்தி உலக பிளிட்ஸ் சதுரங்க சாம்பியன்ஷிப்பினை வென்றார்.

# தேசியச் செய்திகள்

## இந்திய திறன்கள் போட்டி 2021




| State / UT | Gold | Silver | Bronze |
|---|---|---|---|
| Odisha | 10 | 18 | 9 |
| Kerala | 8 | 8 | 5 |
| Maharashtra | 8 | 4 | 7 |
| Karnataka | 7 | 8 | 4 |
| Andhra Pradesh | 7 | 4 | 1 |
| Bihar | 4 | 2 | 5 |
| Haryana | 3 | 4 | 1 |
| Gujarat | 3 | 1 | 2 |
| Rajasthan | 3 | 1 | 1 |
| Tamil Nadu | 2 | 8 | 8 |
| Chandigarh | 2 | 2 | 1 |
| Punjab | 1 | 4 | 1 |
| Uttar Pradesh | 1 | 2 | 2 |
| Madhya Pradesh | 1 | 2 | - |
| West Bengal | 1 | 1 | 1 |
| Delhi | - | 2 | 1 |
| Jharkhand | - | 2 | 1 |
| Uttarakhand | - | 2 | - |
| Tripura | - | - | 1 |
| Assam | - | 1 | - |
| Goa | - | 1 | - |
| Mizoram | - | - | 1 |
| Andaman & Nicobar | - | - | 1 |

- இந்திய திறன்கள் 2021 எனும் தேசிய அளவிலான போட்டி சமீபத்தில் நிறைவடைந்தது.

- இந்தப் போட்டியில், 270 வெற்றியாளர்களுக்கு 61 தங்கம், 77 வெள்ளி, 53 வெண்கலம் மற்றும் 79 சிறப்புப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.
- 'இந்திய திறன்கள் 2021' போட்டியில் 51 பதக்கங்களுடன், இந்த ஆண்டில் பங்கேற்ற 26 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் ஒடிசா முதலிடம் பிடித்துள்ளது.
- இதில் மகாராஷ்டிரா இரண்டாவது இடத்தைப் பெற்றது.
- இதில் கேரளா மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- இந்தியா திறன்கள் 2021 என்ற போட்டியில் வெற்றி பெறும் அணிகள் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற உள்ள உலக திறன்கள் சர்வதேசப் போட்டியில் பங்கேற்கும் ஒரு வாய்ப்பைப் பெறும்.

## செயல்பாடு மற்றும் ஆராய்ச்சியை நோக்கி பொலிவுறு நகரங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் (SAAR) திட்டம்





- செயல்பாடு மற்றும் ஆராய்ச்சியை நோக்கிப் பொலிவுறு நகரங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் (SAAR - Smart Cities and Academia Towards Action and Research) எனும் திட்டமானது பொலிவுறு நகரங்கள் திட்டத்தினால் தொடங்கப்பட்டது.
- பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை இது ஆவணப் படுத்தும்.
- இது ஆசாதி கா அம்ருத் மஹோத்சவ் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகும்.
- SAAR திட்டமானது பிரதானமாக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படுகிறது.
- தேசிய நகர்ப்புற விவகாரங்கள் கல்வி நிறுவனம் மற்றும் நாட்டின் பிற முதன்மையான கல்வி நிறுவனங்கள் ஆகியவை இந்த அமைச்சகத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஈடுபட உள்ளன.
- இதில் 15 முதன்மையான கட்டிடக்கலை நிறுவனங்களும் உள்ளடங்கும்.
- தொடக்கத்தில், 75 நகர்ப்புற திட்டங்களுக்கான பட்டியலை SAAR தயாரிக்க உள்ளது.

- பல்வேறு பொலிவுறு நகரத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளதும், மற்றும் பிரதமரின் தொகுதியாகவும் திகழும் வாரணாசி நகரம், SAAR திட்டத்தில் இணையத் தவறியது.

# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்கா மற்றும் ரஷ்யா - உக்ரைன் தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தை




- சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமெரிக்க மற்றும் ரஷ்ய அதிகாரிகளின் முக்கியச் சந்திப்பு நடைபெற்றது.
- உக்ரைனில் நிலவும் பதற்ற நிலை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து அவர்கள் விவாதிக்க உள்ளனர்.
- உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பினால் அமெரிக்காவும் மற்ற மேற்கத்திய நாடுகளும் அச்சத்தில் உள்ளன.
- உக்ரைன் நாட்டிற்கு அமெரிக்கா மற்றும் இதர பிற மேற்கத்திய நாடுகள் ஆதரவு அளிக்கின்றன.
- சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பிறகு உக்ரைன் நாடு உருவாக்கப்பட்டது.
- உக்ரைன் எல்லையில் ஆயிரக்கணக்கான ராணுவ வீரர்களை ரஷ்யா நிறுத்தியுள்ளது.
- இதனால் அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே பனிப்போர் (உட்பூசல்) மூண்டது.

*பின்னணி*

- 2014 ஆம் ஆண்டில் ரஷ்யா கிரீமியாவினைத் தன்னோடு இணைத்ததைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை தொடங்கியது.
- கிரீமியா உக்ரைன் நாட்டில் அமைந்துள்ளது.
- இப்பகுதி கெர்ச் ஜலசந்தியை உள்ளடக்கியது.
- ரஷ்யாவின் அனைத்துத் தொடர்புகளும் மத்திய தரைக்கடல் நாடுகளைச் சென்று அடைவதற்கான ஒரே பாதை இந்த ஜலசந்தி மட்டுமே ஆகும்.
- இந்த ஜலசந்தியானது அசோவ் கடலையும் கருங்கடலையும் இணைக்கிறது.
- இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வர்த்தகப் பாதையாகும்.
- முக்கியமாக ரஷ்ய நாட்டின் கப்பல் போக்குவரத்தை கடினமாக்குவதற்காக வேண்டி அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆகியவை உக்ரைன் நாட்டிற்கு ஆதரவை

வழங்குகின்றன.

## ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா - பாதுகாப்பு ஒப்பந்தம்

- ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.
- இது அவற்றின் இராணுவங்களுக்கு இடையே நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்தி, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சீனாவின் உறுதிப்பாட்டிற்கு ஒரு கண்டனமாகவும் விளங்குகிறது.
- ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் மற்றும் ஜப்பானியப் பிரதமர் ஃபுமியோ கிஷிடாவ் ஆகியோர் காணொலி வாயிலாக சந்தித்து இந்த பரஸ்பர அணுகல்முறை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.
- அமெரிக்காவைத் தவிர்த்து வேறு ஒரு நாட்டுடன் ஜப்பான் மேற்கொள்ளும் முதல் பாதுகாப்பு ஒப்பந்தம் இதுவாகும்.

## உலக ரோபோட்டிக்ஸ் (எந்திர மனிதன்) கண்டுபிடிப்புகளின் மையம்

- 2025 ஆம் ஆண்டிற்குள் உலக ரோபாட்டிக்ஸ் (எந்திர மனிதன்) கண்டுபிடிப்புகளின் மையமாக மாறும் இலக்கை அடைவதற்கான ஒரு ஐந்தாண்டு செயல் திட்டத்தை சீனா அறிவித்துள்ளது.
- 2021 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் நாட்டின் ரோபாட்டிக்ஸ் (எந்திரவியல்) துறையின் இயக்க வருமானம் ஆண்டுக்கு 20% அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக சீனாவின் தொழில்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- 2021 உலக ரோபோ அறிக்கையின்படி, தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகியவை ஆசிய-பசிபிக் நாடுகளில் முன்னணியில் உள்ள மிகவும் எந்திர மயமாக்கப் பட்ட மூன்று நாடுகள் ஆகும்.

## உவரியோப்சிஸ் டிகாப்ரியோ




- உவரியோப்சிஸ் டிகாப்ரியோ என்பது புதிதாக கண்டறியப்பட்ட ஒரு மர இனமாகும்.
- இது 2022 ஆம் ஆண்டில் புதிதாகக் கண்டறியப்பட்ட முதல் மர இனமாகும்.
- கேமரூனின் வெப்பமண்டல எபோ காடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இனமானது இப்பகுதியை பூர்வீகமாகக் கொண்டது ஆகும்.

- இந்த மரத்தின் மஞ்சள் கலந்த பச்சை நிற பூக்கள் நேரடியாக அவற்றின் தண்டு மீது வளரும்.
- விசித்திரமான மற்றும் கண்கவர் தாவர இனங்களின் பட்டியலில் இந்த மரம் சேர்க்கப் பட்டுள்ளது.
- இந்த மர இனமானது மிகவும் அருகி வரும் இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நிலவின் மேற்பரப்பில் நீர்




- சீனாவின் சேஞ் 5 எனும் சந்திர தரையிறங்கும் கலனானது நிலவின் மேற்பரப்பில் நீர் இருப்பதற்கான முதல் ஆதாரத்தைக் கண்டறிந்துள்ளது.
- நிலவில் இக்கலன் தரையிறங்கிய இடத்தில் உள்ள மண்ணில் மில்லியனுக்கு 120 பாகங்களுக்கும் குறைவான அளவு (பிபிஎம்) தண்ணீர் அல்லது ஒரு டன்னுக்கு 120 கிராம் என்ற அளவில் தண்ணீர் இருப்பது குறித்து இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.
- ஒரு மிதமான எடையினைக் கொண்டுள்ள வெசிகுலர் பாறையானது (vesicular rock) 180 பிபிஎம் அளவு தண்ணீரைக் கொண்டுள்ளது.

## HD73619




- இந்திய மற்றும் சர்வதேச விஞ்ஞானிகள் குழு "ஒரு இயக்கத் துடிப்பைக் காட்டுகின்ற, ஆனால் துடிப்புகள் இல்லாத விசித்திரமான ஒரு இரட்டை நட்சத்திரத்தை" கண்டறிந்து உள்ளது.
- இயக்கத் துடிப்பு மற்றும் துடிப்பு ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும் இது இரட்டை

நட்சத்திரங்களின் விதிமுறைக்கு முரணானது ஆகும்.

- HD73619 என்றழைக்கப்படும் இந்த நட்சத்திரமானது கடகம் என்ற ஒரு விண்மீன் தொகுப்பில் அமைந்துள்ளது.
- ஆர்யபட்டா ஆய்வு அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த சந்தோஷ் ஜோஷி தலைமையிலான 33 விஞ்ஞானிகள் குழுவானது HD73619 நட்சத்திரத்தின் ஆய்வுகளை மேற்கொண்டது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கூற்றுப்படி, இன்று வரையில் மொத்தம் 180 'இயக்கத் துடிப்பு' கொண்ட நட்சத்திரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உல்ஃப் எரிமலை




- கலபகோஸ் தீவுகளில் உள்ள இந்த உயரமான இந்த எரிமலை சமீபத்தில் வெடித்தது.
- அதன் பக்கவாட்டுப் பகுதிகளில் எரிமலைக் குழம்புகளையும், பசிபிக் பெருங்கடல் மேற்பரப்பிலும் சாம்பல் திரள்களையும் இந்த எரிமலை கக்கியது.
- இந்த எரிமலையானது இதற்கு முன்பு 2015 ஆம் ஆண்டில் வெடித்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## UiPath சிறந்த எந்திரவியல் விருதுகள் 2021

- தெற்கு இந்திய வங்கியானது (சவுத் இந்தியன் பேங்க்) 2021 ஆம் ஆண்டிற்கான UiPath சிறந்த எந்திரவியல் விருதுகளை வென்றது.
- இந்த விருது "வணிகத்தைத் தொடர்வதில் நெருக்கடி நிலவும்" சூழ்நிலைகளிலும் சிறந்து செயல்பட்டதற்காக இந்த வங்கிக்கு வழங்கப்பட்டது.
- பரிமாற்றம் மிக்க எந்திரவியல் திட்டங்களின் மூலம் மாற்றத்தைக் கொண்டு வந்ததற்காக இந்தியா மற்றும் தெற்காசியா (இலங்கை, வங்காளதேசம் மற்றும் நேபாளம்) ஆகிய நாடுகளில் உள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பிற்கு அங்கீகாரம் அளிப்பதற்காக வேண்டி 2021 ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

### சம்பா

- "சம்பா" என்று அழைக்கப்பட்ட, பிரபல கன்னட எழுத்தாளர் சந்திரசேகர் பட்டீல் தனது 82 வது வயதில் காலமானார்.
- இவர் ஒரு கன்னட மொழி ஆர்வலர், கவிஞர் மற்றும் நாடக ஆசிரியர் ஆவார்.
- இவர் கன்னட சாகித்ய பரிஷத்தின் தலைவராகவும், கன்னட வளர்ச்சி ஆணையத்தின் தலைவராகவும் பணியாற்றியவர் ஆவார்.



## விளையாட்டுச் செய்திகள்

### விரைவு சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டி 2021

- நோடிர்பெக் அப்துசட்டோரோவ் (உஸ்பெகிஸ்தான்), 2021 ஆம் ஆண்டின் உலக விரைவு சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றார்.
- அவர் டைபிரேக்கர் என்ற சுற்றில் இயன் நெபோம்னியாச்சி (ரஷ்யா) என்பவரைத் தோற்கடித்து, பிறகு தற்போது உலகின் ஒரு முன்னணி வீரராக திகழும் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தினார்.
- 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற FIDE சாம்பியன்ஷிப் போட்டியில் மேக்னஸ் கார்ல்சன் வெற்றி பெற்றார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★